(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(எ) பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால்நடை பாதுகாப்புச் சட்ட முன் வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால்நடைப் பாதுகாப்புச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/1979) பேரவையில் எடுத்துக்கொள்ள ஆளுநர் தம் இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

அரசினர் சட்ட முன்வடிவுகள்

(ஏ) பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்-கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே…

திரு எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, இப்போது கொண்டுவரப்படுகிற சட்டமுன் வடிவு அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்ற அடிப்படையிலே சட்டசபையிலே மொழிவதை நான் ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை" சட்ட முன்வடிவு எண் 42/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு திருத்தங்களை திரு. என். சங்கரய்யா, திரு. சோ. அழகர்சாமி, திரு. எம். ஏ. லத்தீப், திரு. சேலம் மு. ஆறுமுகம், திரு. ஆர். கிருஷ்ணன் ஆகியவர்கள் கொடுத்து இருக்கிறார்கள்.

திரு. என். சங்கரய்யா : I move the following Amendment :

"That the concurrence of the Tamil Nadu Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses, consisting of ...... Members (List of Members to be given later) to consider the Tamil Nadu Prevention of Cow Slaughter and Animal Preservation Bill, 1979 (L.A. Bill No. 42 of 1979)".

திருவாளர்கள் சோ. அழகர்சாமி, எம். ஏ. லத்தீப், சேலம் மு. ஆறுமுகம், ஆர். கிருஷ்ணன் ஆகியோர் திருத்தத்தை வழி மொழிந்தனர்.